மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறையில்லை என்று சொல்லிவிட்டுப் பேசுவது என்றால் இது என்ன முறை? (குறுக்கீடு) எந்த முறையும் இல்லாமல், நான் அப்படித்தான் பேசுவேன் என்று சொல்வது என்ன நடைமுறை? (குறுக்கீடு) வீணாக இந்தப் பேரவையில் குழப்பம் விளைவிக்க வேண்டும் என்பதைத் தவிர இது வேறு என்ன முறை? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன முறை உங்களுடைய கட்சியில் வைத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. பேரவையில் வேறு விவாதம் போய்க் கொண்டிருக்கிறபோது இப்படி எழுந்து பேசுவது என்ன முறை? (குறுக்கீடு) மூத்த உறுப்பினர் என்றால் எதுவும் பேசலாம், எப்போதும் பேசலாம் என்று ஏதாவது முறை இருக்கிறதா? இது முறையற்ற போக்கு. (குறுக்கீடு) முடியாது, இது சரியல்ல. இது முறையல்ல. (குறுக்கீடு) என்னுடைய கவனத்திற்கு எதுவும் கொண்டு வராமல் பேசுவது முறையல்ல, உட்காருங்கள்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. சஞ்சய் ராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக என்னை நியமித்ததற்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொண்டு, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 1995–96 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூறு முதல் இருநூற்று நாற்பத்தொன்று வரையிலான 42 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன். இவற்றில் 200 முதல் 203 வரையிலான அறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. 204–வது அறிக்கை முதல் 241–வது அறிக்கை வரையிலான அறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு பேரவையில் அளிக்கப்படுவதற்கு போதுமான கால அவகாசம் இல்லாததால் இவ்வறிக்கைகளின் படியெடுத்த நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப்